Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 209

வெள்ளிக்கிழமை 23 ஜூன் 2023

2054



# காணாமற்போனோருக்கான அலுவலகம் வெற்றிகரமாகச் செயற்படுகிறதாம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 23**

**வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை காணாமற்போனோர் அலுவலக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** »15

யாழ். மாவட்டத்தில்

## மாணவிகளின் பாதுகாப்புக்காக 'வட்ஸ்அப்' குழுக்கள் ஆரம்பம்!

உடன் நடைமுறைப்படுத்த பொலிஸார் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில், வகுப்பு ரீதியாக வட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டு மாணவிகளின் பெற்றோரின் அலைபேசி இலக்கங்கள் இணைக்கப் »10

## மனிதப்புதைகுழி அகழ்வுகளில் சர்வதேச கண்காணிப்பாளர்கள்

அழுத்தக்குழுக்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23
கடந்தகால பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சிறிலங்கா அரசாங்கம் சிரத்தையாக இருக்குமாயின், மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் அனைத்திலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இருப்பதனை அது உறுதிப்படுத்த வேண்டும் என ஐந்து குடியியல் சமூகக் குழுக்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளன. »10

## ஜனாதிபதி ரணில் முல்லை பயணம்!

முல்லை., ஜூன் 23
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை மாதம் முதல் வாரத்தில் முல்லைத்தீவுக்குப் பயணம் »15

யாழ். - இந்தியா

## வாரம் முழுதும் விமான சேவை

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23
யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் தற்போது வாரத்தில் நான்கு தினங்கள் இடம்பெறும் விமான சேவைகளை வாரத்தின் ஏழு நாள்களிலும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விமான சேவைகள் மற்றும் துறைமுக அபிவிருத்தி »10

இலங்கையின்

## பொருளாதாரம் மேம்பட ஐ.எம்.எப். அர்ப்பணிப்பு

ரணிலிடம் வாக்குறுதி

கொழும்பு, ஜூன் 23
இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு, சர்வதேச நாணய நிதியம் அர்ப் »15

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் கருத்துமோதல்கள் உச்சம்!



கொழும்பு, ஜூன் 23
பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் கருத்து மோதல்களும் முரண்பாடுகளும் உச்சம் தொட்டுள்ளன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய »15

அத்துமீறிய மீன்பிடி

## 22 தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜூலை 23
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் »15

வடக்கில்

## ஓகஸ்ட் மாதத்தில் வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 23
வடக்கில் வணிக வாய்ப்புகளை மேம்படுத்தும் முகமாக, வடக்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஓகஸ்ட் மாதம் 11, 12, 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. »15

## என் மீதான குற்றச்சாட்டுகள் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடே

வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு பதிலடி

யாழ்ப்பாணம், ஜூன் 23
கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனின் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பில், இலங்கை ஆசிரிய சங்கம் முன்வைத்த குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை. »15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரவாதச் சட்டத்தை ஒழித்து புதிய சட்டத்தை பதிலீடு செய்க

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 23**

**நாட்டு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும், அவற்றுக்கு மதிப் பளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தக்கூடியவாறு பயங்கரவாதத்தடைச் சட்டத்தை இல்லாதொழித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவானதொரு சட் டத்தைப் பதிலீடு செய்யவேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையின் 53 ஆவது கூட் டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற 4ஆவது அமர்வில் ஆணையாளர் வொல் கர் டேர்க்கினால் சர்வதேச நாடு களின் மனித உரிமைகள் நிலை வரம் தொடர்பான வருடாந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட் டது. அதில் மேலும் கூறப்பட்ட தாவது:

சர்வதேச நியமங்களுக்கு அமை வாகப் பயங்கரவாதத்தடைச்சட்ட தைப் பதிலீடு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முயற்சி கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

இதுகுறித்து சட்டத்துறை நிபுணர் களாலும், சிவில் சமூகப்பிரதிநிதி களாலும் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் மற்றும் பரிந்து ரைகள் கவனத்திற்கொள்ளப்படு வதை நாம் பெரிதும் ஊக்குவிக் கின்றோம். நாட்டுமக்களின் உரி மைகள் பாதுகாக்கப்படுவதையும், அவற்றுக்கு மதிப்பளிக்கப்படுவ தையும் உறுதிப்படுத்தக்கூடிய வாறு இந்தச் சட்டவரைவு அமைய வேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# ஊடகங்களைப் பலமாக்கவே ஊடகங்கள் ஒழுங்கு சட்டம்

## ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

ஊடகங்களைப் பலப்படுத்துவதற்கும் உண்மை யான தகவல்களை மக்களுக்குப் பெற்றுக்கொடு பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்குமே ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவு கொண்டுவரப் படவுள்ளது. ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது என ஊட கத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் சிறந்த ஊடக ஒழுங்குபடுத்தலை மேற் கொள்வது தவிர ஊடகங்களைக் கட்டுப்படுத்துவ தற்கான எந்தத் தேவையும் அரசாங்கத்துக்கு கிடையாது.

தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தில், எந்த ஓர் ஊடக நிறுவனத்தின் ஒளிபரப்பு அனுமதிப்பத்திரத் தையும் விடயதுக்குப் பொறுப்பான அமைச்சரால் இரத்துசெய்ய முடியும். புதிய சட்டம் உருவாக்கப் பட்ட பின்னர் அந்தச் சட்டத்தில் மாற்றம் ஏற்படும். ஊடகங்களைப் பலப்படுத்துவதற்கும் உண்மை யான தகவல்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுப் பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்குமே இந்த ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவு கொண்டுவரப்படவுள்ளது.

அனைவரினதும் கருத்துகள் அதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னரே சட்டமாக்கப்படும்- என்றார். (ச-இ)

# மருத்துவர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 23

காலி கராபிட்டிய போதனா மருத்துவமனையில் சுமார் 100 மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று தெரிவிக்கப்படுகின் றது.

மருத்துவமனையில் அங்கீ கரிக்கப்பட்ட மருத்துவர்க ளின் எண்ணிக்கை 556 ஆக இருந்தாலும், தற்போது 460 மருத்துவர்களே உள் ளனர் என்றும், மருத்துவர் கள் வெளிநாடு சென்றதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்கள் பற்றாக் குறை காரணமாக அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சத்திரசிகிச்சை அறை மற் றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவைத் திறக்க முடியாதுள் ளது என்று மருத்துவம னைப் பணிப்பாளர் தெரி வித்துள்ளார். (எ-இ)



பிரிட்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு பல்வேறு தரப்புக்களைச் சந்தித்து வருகின்றார். லைக்கா குழுமத் தலைவர் சுபாஸ் கரனையும் அவர் அங்கு சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (எ-6)



# தப்பினார் 'தப்புல'!

கொழும்பு, ஜூன் 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தெரிவித்த கருத்துக் காக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கைதுசெய் யப்படார் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். அதனையடுத்து முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கைது நடவடிக்கையிலிருந்து தப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் இடம்பெற்றமை தொடர்பாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா சர்ச்சைக்குரிய கருத்தை 2021ஆம் ஆண்டு வெளி யிட்டிருந்தார். இதுதொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வரு கின்றது.

இந்தநிலையில் தன்னைக் கைது செய்வதனைத் தடுக்கும் உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கவேண்டும் என்று கோரி தப்புல லிவேரா மனு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு தொடர்பான விசாரணைகளின்போது சட்டமா அதிபர் திணைக்களம், இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளது. (ச-இ)

# தங்கம் கடத்தல் அலி சப்ரிக்கு உபசரிப்பு

## கொழும்பு ஊடகம் கேள்வி

கொழும்பு, ஜூன் 23

தங்கக் கடத்தல் வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரிக்கு விசேட உபசரிப்பு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் டெய்லி மிரர் பத்திரிகை சுங்கத்திணைக்கள அதிகாரிகளி டம் கேள்வி எழுப்பியுள்ளது.

அண்மையில் பிரெஞ்சுப் பிரஜை ஒருவர் நாட்டுக்குள் 85 மில்லியன் பெறுமதியான தங்கம் கொண்டு வந்தபோது அவருக்கு 70 மில்லியன் ரூபா தண்டப்பணம் விதிக்கப் பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கொண்டு வந்த தங்கத்தின் பெறுமதி 78 மில்லியன். அவ ருக்கு 7.5 மில்லியன் தண்டப்பணம் மாத்திரமே விதிக்கப் பட்டுள் ளது. ஒரேவிதமான குற்றத்துக்கு இரண்டு விதமான தண்டனைகள் ஏன் வழங்கப்பட்டன? என டெய்லி மிரர் கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த சுங்கத்திணைக்களப்பணிப்பாளர், சுங்கச் சட்டத்தின் 163ஆவது பிரிவு தண்டப்பணத்தை குறைப் பதற்கு சுங்கத்திணைக்களப் பணிப்பாளருக்கு அதிகார முண்டு. அலி சப்ரி ரஹீம் வியாபாரி அல்லர் என்று தெரிவித் தார். இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் தங்கக் கடத்தல் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசா ரணை நடத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, சபாநாயகருக்குப் பணித்துள்ளார். (ச-6)

# நாமலுக்கான பயணத்தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 23

கிரிஷ் நிறுவனம் தொடர்பான வழக் கில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு விதிக்கப்பட்டிருந்த பய ணத்தடை நீதிமன்றத்தால் நீக்கப்பட் டுள்ளது. கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பில் நாமல் ராஜபக்ச 70 மில்லியன் ரூபா ஊழல் செய்துள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைய நாம லுக்கு எதிரான வழக்கு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்குத் தொடுக்கப்பட்டு 7 ஆண் டுகள் கடந்துவிட்ட நிலையில், நாமல் ராஜபக்சவுக்கு நீதிமன்றத்தால் விதிக் கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்க வேண்டும் என்ற அவ ரது கோரிக்கை நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துகிறதாம் இலங்கை

## ஐ.நா. பேரவையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

**நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு எம்மால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. அதன் மூன்றாம் நாள் அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கவனத்திலெடுக்கப்பட்டது.

இதன்போது மனித உரிமைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கையால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக விளக்கினார்.

இலங்கை முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்டமை உள்ளடங்கலாக பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நாட்டின் அரசமைப்புக்கமைவாகப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், தமிழ் அரசியல் தரப்பினருடன் நடத்தப்பட்ட சந்திப்புக் குறித்து சுட்டிக்காட்டிய வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக, காணி விடுவிப்பு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, அரசியல்கைதிகள் விடுதலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டமை பற்றியும் பேரவையில் பிரஸ்தாபித்தார்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு மாற்றியமைக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருப்பதாகவும், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கையாக செயலகமொன்று நிறுவப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தால் 3000 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பூர்த்திசெய் யப்பட்டுள்ளன. ஏனைய முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளுக்கு இலங்கை தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்றும் ஹிமாலி அருணதிலக சுட்டிக்காட்டினார். (ச-இ)

# வாக்காளர் பதிவுக்கான காலஅவகாசம் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 23

வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்ப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். வாக்காளர் பட்டியலில் பெயர்களை இணைப்பதற்கான காலஅவகாசம் கடந்த 16 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள நிலையில், இந்தக் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பெயர்களை இணைப்பதற்கான இறுதித்திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார் - என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)


# கமெராக்கள் தேவை




**புதிய அல்லது பாவிக்கக்கூடிய நிலையிலுள்ள DSLR கமெரா மற்றும் வீடியோ கமெரா என்பன தேவை.**

விற்க விரும்புவோர் கமெரா , வீடியோ கமெராவின் ஒளிப்படம் மற்றும் அதன் Brand என்பவற்றையும், தொடர்பு இலக்கம் மற்றும் பெறுமதியையும் குறிப்பிட்டு coljoujob@gmail.com இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


# நிதி வழங்காவிட்டால் பதவியை உதறுவேன்

## *மிரட்டுகிறார் கெஹலிய*

மருந்துகளைக் கொள் வனவு செய்வதற்குத் தேவையான நிதியைக் கொடுக்காவிட்டால் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவேன் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலவச சுகாதாரத்துறைக்கு வழங்கப்படும் நிதி தொடர்பாகப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதைச் சரிசெய்ய முடியாவிட்டால் தொடர்ந்தும் பதவியில் இருக்க நான் தயாராக இல்லை.

அதேவேளை, பிரச்சினைக்குரிய மயக்க மருந்து இதுவரை குழந்தைகளுக்கு உட்செலுத்தப்படவில்லை. அந்த மருந்து வயது வந்தவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

பேராதனை போதனா மற்றும் பேராதனை பண்டாரநாயக்க சிறுவர் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை களில் பயன்படுத்தப்பட்ட இந்திய தயா ரிப்பு மயக்க மருந்தால் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அது தொடர்பாகவே அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். (எ-இ)




'ஆத்தை அரிசிக்கு அழுதாவாம் குத்தியன் ஐபோனுக்கு அழுதானாம்' எண்ட கதையா, வலிகாமம் மேற்கில ஒரு கூத்து நடக்குது. ஏற்கனவே இப்ப இளம் பிள்ளையள் குடிவெறி, போதை எண்டு தறிகெட்டுப் போய்க்கொண்டிருக்கே எண்டு சனம் தலையில கைவைச்சு ஒப்பாரி பாடிக்கொண்டிருக்க , அதைப் பற்றி கொஞ்சம் கூட அக்கறைப்படாமல் புதுசா ஒரு 'பார்' திறக்கிறதுக்கு ஒரு குரூப் ஓடியாடி அலுவல் பாக்குதாம். ஏற்கனவே கொழும்புக்கு பஸ் ஓடி கையில சுளையாக் காசிருந்தும், அதை இன்னும் பெருக்கிறதுக்கு 'தண்ணி பிஸ்னஸ்' தான் ஒரே வழி எண்டு, 'பார்' லைசென்ஸ் எடுக்க வெளிக்கிட்டிருக்கினம்.

அவை பார் போட செலக்ட் பண்ணியிருக்கிற இடத்துக்கு பக்கத்தில ஒரு அம்மன் கோயில் இருக்கு. கொஞ்சம் தள்ளி ஒரு பெரிய பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, ரியூட்டரியள், கடை கண்ணியள் எல்லாம் இருக்கு. அதோட இந்த இடத்துக்கு கொஞ்சம் தள்ளி, ஒரு அரைக் கிலோ மீற்றருக்கு அங்கால இன்னொரு பாரும் இருக்கு. அப்பிடி ஆருக்கும் 'தண்ணி' விடாய்ச்சால் அங்க போய் வாங்கிக் குடிப்பினம். இந்த நிலைமையில புதிசா இன்னொரு பார் வந்தால், அந்த இடமே குடிகார நகரமா மாறி பிறகு நரகமாயிடும். பள்ளிக்கூடப் பிள்ளையள் அதால போய்வர ஏலாமல் ஒரே தூசணப்பாட்டுத்தான் அந்த ஏரியா முழுக்க இருக்கும். அம்மன் வீதிவலம் வரேக்க, சாராய வாசத்தோடதான் அவாவும் வசந்தமண்டபத்துக்கு திரும்பி ஓடவேண்டியிருக்கும். ஏற்கனவே அடிக்கடி அக்சிடெண்ட் நடக்கிற அந்த இடத்திலேயே இந்த 'பார்' வந்தால் எமன், நிரந்தரமா தன்ர யமலோக ஒப்பீஸையும் திறக்கக்கூடும். இப்பிடியெல்லாம் நடந்தால், அந்த இடத்தால சனங்கள் போய்வரவே முடியாமல் போடும். ஆனால் இப்பிடி ஒரு வேலை நடக்குதெண்டு அங்கத்தைப் பொது அமைப்புகளுக்கு தெரியவர, உடனேயே பிரதேச செயலருக்கு அவை எதிர்ப்புக் கடிதங்கள் குடுத்திட்டினம். ஆனால் அதுக்குப் பிறகும் அந்த பார் குரூப் அடங்கேலை. 'ஆர் எதிர்த்தாலும் அதை உடைக்கிற மாதிரி எங்களுக்கு உடைச்சு பார் போடத் தெரியும்' எண்ட வீம்போட அலுவல் பாக்க வெளிக்கிட்டிருக்கினம். மேலிடத்தில 'குடுக்க வேண்டியதைக் குடுத்து' அலுவல் பார்க்கத் தெரிஞ்ச 'பார்' காரருக்கு பிரதேச செயலர் வைச்சா ஒரு ஆப்பு.

இவை அந்தப் பிரதேச செயலரிட்டப் போய் 'எங்களில உள்ள பொறாமையிலதான் பொது அமைப்புகளின்ர பேரில பெட்டிசம் போட்டிருக்கினம். ஆனால் சனம் பார் போடுறதுக்கு சப்போர்ட்டாத்தான் நிக்குது' எண்டு சொல்லியிருக்கினம்.

'சனம் ஓமெண்டாத்தான் பார் போடுறதுக்கான என்ர அனுமதியைத் தரமுடியும். முதல்ல சனத்தின்ர ஒப்புதலை வாங்கிக் கொண்டு வாங்கோ' எண்டு அவா வெட்டு ஒண்டு துண்டு ரண்டு எண்டு சொல்ல, 'இப்ப போய் ஆயிரம் பேரின்ர கையெழுத்து வாங்கிக் கொண்டு வாறம்' எண்டிட்டு பார் போட வெளிக்கிட்டவை போயிருக்கினம். இப்ப என்னடாவெண்டால், தாங்கள் பார் போட செலக்ட் பண்ணியிருக்கிற இடத்தைச் சுத்தி இருக்கிற வீடுகளில, கடையளில இருக்கிற 'குடிமகன்களை' மடக்கி, அவையிட்ட கையெழுத்து வாங்கிற வேட்டை அறம்புறமா நடக்குதாம். தங்கட சந்ததியைப் பற்றியோ, அந்த ஏரியாவின்ர புனிதத்தைப் பற்றியோ, கோயிலைப் பற்றியோ, பள்ளிக்கூடத்தைப் பற்றியோ கவலையேபடாத கனபேர், 'பார் வைக்கிறதுக்கு நாங்கள் சம்மதம்' எண்டு கையெழுத்தும் வைக்கினமாம்.

'போரை நிறுத்து' 'சர்வதேசமே நீதி தா' 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு' எண்டெல்லாம் கோரிக்கையை முன்வைச்சு கையெழுத்துப் போராட்டம் நடத்தின தமிழினம், இப்ப 'பார் வைக்க அனுமதி தா' எண்டு கையெழுத்து வேட்டை வைக்கிற அளவுக்கு போட்டுதே. இதை ஆரிட்டச் சொல்லிய ழுகிறது?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பிரச்சினைகள் உயர்வு தேய்வுறும் நிலையில் வடக்கு!

## தீர்வுகாண ஒன்றிணையுங்கள் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ல்ஸ் அழைப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 23**
**வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சுமார் 194 பாடசாலைகள் மாணவர்கள் இன்மையால் மூடப்பட்டுள்ளன. இதற்கு கிராமப்புறங்களிலிருந்து நகரப்புறப்பாடசாலைகளை நோக்கி நகர்தல் மற்றும் தற்போது எமது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் என்பன காரணிகளாக அமைகின்றன.**

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ல்ஸ் தெரிவித்தார்.
கனகராயன் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கைப் பொறுத்தவரை சுமார் 194 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியிருக்கின்றமையும், பிறப்பு வீதம் குறைந்து செல்வதுமேயாகும்.
இந்தச் சமூகத்திலே விவாகரத்து அதிகரித்தல், குழந்தைப் பேறு குறைவடைந்தமை, வயதேறிய திருமணங்கள் மற்றும் மது, போதைவஸ்து, உயிர்மாய்ப்புகள் போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.
எம் இளைய சமூகத்திடமும், மாணவர்களிடையேயும், சிறுவர்களிடையேயும், குடும்பங்களிடையேயும் புரையோடிப்போயிருக்கின்ற சமூக உளநலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய தேவையும் அவசரமும் இன்று எங்களிடம் காணப்படுகிறது.
வெறுமனே உரிமைப் பிரச்சினையோ, அரசியல் பிரச்சினையோ என்றில்லாது எங்களது பிரச்சினைகள் என அனைவரும் உணர்ந்து புலம்பெயர் சமூகங்களும், உள்ளூர் சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (ச-110)

## சுற்றுலா, விருந்தோம்பல் கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
ஒரு வருட காலத்தைக் கொண்டமைந்த இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர். க. பொ.த. உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்க வேண்டும் என கற்கைநெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார். (ச)

## அரசமைப்புக்கு முரண்பாடின்றி கருத்துச் சுதந்திரம் பாதுகாப்பு

### விளக்கம் கொடுக்கின்றார் மனுஷ



கொழும்பு, ஜூன் 23
ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானதல்ல. கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்து, பலப்படுத்துவதே இதன் முக்கியமான நோக்கமாகும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவின் மூலம் மக்கள் சரியான தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை கிடைக்கின்றது. எவராவது தவறான செய்தியை வெளியிட்டால் அரசாங்கத்தின் மூலமாக ஒழுங்குபடுத்தல் முன்னெடுக்கப்படும்.
அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், சரியான தகவலை அறிந்து கொள்வதற்கான உரிமையைப் பாதுகாத்தல் என்ற விடயங்களை மேலும் பலப்படுத்துவதாக இந்தச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அது ஒளிபரப்பாளர்களின் சங்கத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அரசமைப்பை மீறும் எந்தவொரு விடயங்களும் இதில் உள்ளடக்கப்படவில்லை.
ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவு தொடர்பாக ஆராயும் குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் இந்த விடயங்களை என்னால் குறிப்பிடமுடியும்- என்றார். (ச-இ)

## தவறி விழுந்து குழந்தை பலி

கொழும்பு, ஜூன் 23
கிணற்றின் படியிலிருந்து தவறி விழுந்த இரண்டு வயதுக் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. தம்பகல்ல மடுல்ல பிரதேச விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கொண்டாட்டத்தின்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மொனராகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகப் பதுளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது. (ய-22)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**மிதுனம்** : எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உறவினர்கள் வகையில் அனுகூலம் உண்டாகும். செலவு செய்ய நேரிடும். மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கடகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். தாயாருடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவும் அலைச்சலும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடவும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்** : எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் ஒரு வழியாக அனுகூலமாக முடிந்துவிடும். அந்நியோன்யம் அதிகரிக்கும். குழப்பம் நீங்கும்.

**தனுசு:** அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அனுசரித்துச் செல்லவும். வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். கனிவாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். பெருமை அடைவீர்கள். ஆதாயம் கிடைக்கும். வழிபடுவது சிறப்பு.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும். பிடிவாதப் போக்கு மாறும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உதவியை மறுக்காமல் செய்வார்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் சில பிரச் சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

## தொழில்சார் விழிப்புணர்வு வழிகாட்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 23
கிளிநொச்சி மாவட்டச் செயலக மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் கிளிநொச்சி இந்துக் கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான கல்விசார் தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் கல்லூரி [illegible] தலைமையில் [illegible] கூடல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.
மாணவர்கள் பாடத் தெரிவுகளை மேற்கொள்ளும் முறைகள், கல்வியில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், மாணவர்கள் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கான திறன்கள் மற்றும் தொழில் தகைமைகள், மாணவர்களின் எதிர்காலம் நோக்கிய வளமான வாழ்க்கை என்பவை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு தெளிவூட்டப்பட்டது. (ய-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

'உனது அறிவையும் ஆற்றலையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்' அவற்றை நீ பகிர்ந்து கொள்ளா விட்டால் அவை உன்னை அழித்து விடும்'

— சோக்கிரட்டிஸ்

## நீதிக்கான குரலாக...

இலங்கையில் இடம்பெற்றது திட்டமிடப்பட்ட இனப்படுகொலையே என்று அவுஸ்திரேலிய நாடாளு மன்றத்தில் வைத்து அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி யிருக்கின்றார் கிறீன் கட்சியின் செனட்டரான சுபிரிட்ஜ். இறுதிப்போர் இடம்பெற்று 14 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் ஈழத்தமிழர்களுக்கு நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின் றது. அவர்களுக்காக கிறீன் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் தன் நிலைப்பாட்டைப் பதிவு செய்திருக்கின்றார்.

இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலைக்கு தமிழர்கள் உள்ளாக்கப்பட்டனர் என்பதை கடந்த வருடம் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டது கனடா. ஆனால், வெறும் இராஜதந்திர அறிக்கை களுடன் நின்றுவிடாது, இலங்கையின் போர்க்குற் றத்தை ஒரு தீர்மானமாக நாடாளுமன்றத்திலும் நிறை வேற்றியிருந்தது. கனேடிய அராங்கத்தின் இந்தத் தீர்மா னம்தான் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான பல்வேறு பட்ட சர்வதேச அறிவிப்புகளுக்கும் நிலைப்பாடுகளுக் கும் காரணமானது. இதன் தொடர்ச்சியாகத்தான் தற் போது அவுஸ்திரேலிய கிறீன் கட்சியின் அறிவிப்பும் அமைந்திருக்கின்றது என்றால் அதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. இதற்காக கிறீன் கட்சியையும் அதன் செனட்டரையும் எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும்.

இனப்படுகொலைகளுக்கு எதிரான நீதி தேடும் பட லத்தில், தெருமுனைப் படர்கொடிகளாகத் தமக் கொரு கொழுகொம்பு கிட்டாதா? என்ற அங்கலாய்ப் பில், 'சர்வதேச ஆதரவை' திரட்டிக்கொண்டிருந்த ஈழத்தமிழர்களுக்கு அவுஸ்திரேலிய செனட்டரின் அறி விப்பு, இதயத்தைக் குளிரச்செய்யும் ஒன்றுதான். ஆனால், இந்த ஆதரவுத் தளங்கள், வெறுமனே அறிக் கைகளுடனும் கண்டனங்களுடனும் தத்தம் செயற் பாடுகளை நிறுத்திவிடாது ஆத்மார்த்தமான நடவடிக் கைகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் முன்னெடுக்கவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு ஈழத்தமிழனினதும் வேணவாவும் பேரவாவுமாகும்.

'இறுதிப்போர் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், இன்னமும் தமிழர்களுக்கு நீதி கிட்டவில்லை' என்று அனுதாபம் கொள்ளும் சர்வ தேசம், இலங்கை அரசாங்கத்தின் இந்த நீண்டகால இழுத்தடிப்பு, தான் கொண்டிருந்த மௌனத்தின் வெளிப்பாடே என்ற தெளிதலை முதலில் ஏற்படுத் திக்கொள்ளவேண்டும். வல்லரசுகளும் சர்வதேச அமைப்புகளும் அதிகாரமிக்க தனிநபர்களும் நீதியை முன்னிறுத்திப் போர்க்கால அடிப்படையில் செயற்பட் டிருந்தால்; காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக்கோரி முன்னெடுக் கப்பட்டுக்கொண்டிருக்கும் போராட்டங்கள் முற்றுப் பெற்று பல மாதங்கள் கடந்திருக்கும். ஆனால், பொரு ளாதார நலனையும் பிராந்திய நலனையும் அணி சேர் கொள்கைகளையும் கொண்டியங்கும் இந்த 21ஆம் நூற்றாண்டுக்கான உலகம் அவ்வாறானதொரு நீதி யைத் தருவதற்கும் தேடுவதற்கும் தயாரில்லை என் பதே கசப்பான உண்மை.

ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல, உலகில் பல்வேறுபட்ட போரின் நெருக்குவாரங்களைச் சந்தித்து ஆலைவாய்க் கரும்பாக நெருக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பலஸ்தீ னர்கள், காஷ்மீரிகள், குர்துக்கள், ரோஹிங்கியர்கள் என அத்தனை சிறுபான்மைச் சமூகங்களுக்கான நீதியும் இவ்வாறான ஊடாட்டத்திலேயே தசாப்தங்கள் கடந் தும் தொங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நீண்ட – நெடிய துயர்க்கதையின் ஓர் அத்தியாயம்தான் ஈழத்தமி ழர்கள் விவகாரம். இந்த சபிக்கப்பட்டபோக்கு என்று முற்றுப்பெறுகின்றதோ அன்றுதான் போரின் கொடூரத் தையும் குரூரத்தையும் எதிர்கொண்டு நடைபிணங்களா கத் தகித்துக்கொண்டிருக்கும் உயிர்க்கூடுகளின் வெம்மை ஓரளவுக்கேனும் தணியும். அதற்காக சுபி ரிட்ஜ் போன்றோரின் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்.



# பொறுப்புக்கூறல் சட்டங்கள் வெறும் காட்சிப்பொருளே!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 23**

**பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை மந்தமாகவே செயற்ப டுகிறது. பொறுப்புக்கூறல் விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து கடமையாற்றுவோம் எனக் கூறும் இலங்கை அரசாங்கத்தால் இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காட்சிப்பொருளாகவே காணப்படுகிறது. பொறுப்புக்கூறலில் சுதந்திரமான விசாரணை இல்லை.**

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரி வித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றி யதாவது:

தீவிரமடைந்துள்ள ஊழல் மோசடியால் இலங்கை வீழ்ச்சி நிலைக்குச் சென்றுள் ளது. நீதித்துறையின் பாது காப்பு மற்றும் சுயாதீனத் தன்மை கேள்வி நிலையில் உள்ளது.

இயற்றப்படும் சட்டங்களால் சமூகக் கட்டமைப்பில் மாற் றம் ஏற்பட்டுள்ளதா? என் பதை அவதானித்தால், இயற்றப்படும் சட்டங்கள் வெறும் காட்சிப்பொருளா கவே காணப்படுகிறது.

பொறுப்புக் கூறல் விவகாரத் தில் இலங்கை மீது நம்பிக்கை கொள்ளமுடியாத தன்மை காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டி யுள்ளார். மருதங்கேணிப் பகுதியில் பொலிஸாருக்கும் எனக்கும் ஏற்பட்ட முரண் பாட்டுச் சம்பவத்தில் எனக்கு அநீதியே இழைக்கப்பட்டுள் ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நிறைவு பெறுவதற்குமுன், பொலிஸா ரைப் பாதுகாக்கும் செயற் பாடு தெளிவாகிறது. இவ்வா றான தன்மை முழுமையாக மாற்றமடையும் வரை ஒரு போதும் முன்னேற்றமடைய முடியாது - என்றார். (ச-இ)

### பாடசாலை பாடத்திட்டத்தில் ஜப்பான் மொழி இணையும்!

கொழும்பு, ஜூன் 23

ஜப்பானிய தொழில் சந்தையை இலக் காகக் கொண்ட ஆரம்பப் பிரிவில் இருந்து பாடசாலைப் பாடத்திட்டத்தில் ஜப்பானிய மொழியை உள்ளடக்க விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கல்வி அமைச்சுடன் இணைந்து சிறு வர்களுக்கு ஜப்பானிய மொழியைக் கற்பிப்பது தொடர்பான திட்டம் தயா ரிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு திரு வாசக முற்றோதல் இடம்பெறும். தொடர்ந்து மாணிக்கவாசக சுவா மிகள் வீதியுலா நடைபெறும். (ய)

**நாளை**

**24.06.2023**

**சனிக்கிழமை**

**ஆனி 09**

சுபநேரம் : 02.55 – 04.25

ராகுகாலம் : 08.55 – 10.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 அடுக்குப் பாதுகாப்புடன் வலம்வரும் படைத்தளபதி

## நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூன் 23**

**நாடு கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இராணுவ அதிகாரியொருவர் ஏழு அடுக்குப் பாதுகாப்புடன் வலம் வருகின்றார். அவர் யார்? என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உரையாற்றிய சந்திம வீரக்கொடி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். 'நான் காலியிலிருந்து வரும் வழியில் இராணுவத் தொடரணியைக் கண்டேன். அதில் இராணுவத்தளபதி விகும் லியனகே பயணம் செய்திருக்கலாம்' என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அதற்கு, 'என்னால் உடனடியாக பதில்வழங்க முடியாதுள்ளது. இதுதொடர்பில் ஆராய்ந்து அறிவிக்கப்படும்' என்று பிரதி நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (ம-6)

## கொலை

இருவேறு இடங்களில் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஹோமாகம நியந்தகலவில் கடந்த 20ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 46 வயதான குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார். கொஸ்கொடை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 52 வயதான குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஒ-22)

## விபத்து

கொழும்பு, ஜூன் 23

வாகன விபத்தில் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு, பாதுக்கை பிரதேசத்தில் கடந்த 20ஆம் திகதி இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

'ஹைஏஸ்' வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதால் விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய தந்தையும், 10 வயதுடைய மகனும் இந்தக் கோர விபத்தில் உயிரிழந்துள்ளனர். பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மகனை மோட்டார் சைக்கிளில் தந்தை ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் பயணித்த வேளையிலேயே கோர விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். (ஒ-22)



## கணவன் கொடூரத் தாக்குதல் மனைவி கால் துண்டிப்பு

கொழும்பு, ஜூன் 23

கணவனால் தாக்குதலுக்குள்ளான மனைவியின் கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

கம்பஹாவில் கணவனால் தாக்கப்பட்ட பெண்ணொருவர் கால் துண்டிக்கப்பட்ட நிலையில் மாவட்ட பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனைக்கு தாமதமாகச் சேர்த்தமையால் அவரின் காலை பொருத்தமுடியவில்லை.

அதனால் அவர் கால்களை இழக்க நேரிட்டுள்ளது. கிரிந்திவெல பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதான பெண்ணே கணவனின் தாக்குதலுக்கு இலக்காகி கால் இழந்துள்ளார். (ச-இ)

### மகள் துஷ்பிரயோகம்

## பொலிஸ் நிலையத்தில் விஷம் குடித்த பெற்றோர்

13 வயதுடைய தமது மகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதை அறிந்த தந்தையும் தாயும் பொலிஸ் நிலையத்தில் வைத்து விஷம் அருந்திய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெலிமடை நகரில் தனித்துக்காணப்பட்ட சிறுமி ஒருவரைப் பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர்.

அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தியபோது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது. அதனையடுத்து சிறுமியின் பெற்றோரை வரவழைத்து குறித்த விடயத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதை அறிந்த அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து விஷம் அருந்தியுள்ளனர். அவர்கள் இருவரையும் பொலிஸார் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அதேவேளை சிறுமியை துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தில் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## மூளைக்காய்ச்சல் மருந்துக்குத் தட்டுப்பாடு



கொழும்பு, ஜூன் 23

மூளைக்காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்பூசியின் கையிருப்பு தற்போது தீர்ந்துவிட்டது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் ஒன்றியக் கூட்டமைப்புக் கூறுகிறது.

இந்த நோய் பரவியுள்ள நாடுகளைச் சேர்ந்தோர் நாட்டுக்கு வருகை தந்தால் பெரும் பிரச்சினை உருவாகும் என்று சங்கத்தின் நிபுணர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இந்தத் தடுப்பூசியை தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் சில இடங்களில் தடுப்பூசி பாதுகாப்பற்ற முறையில் பதுக்கப்படுகிறது. அதனால் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கோத்தாவுக்கு நடந்தது ரணிலுக்கு நடக்காது!

### மஹிந்தானந்த தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நடந்தது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நடக்காது என பொதுஜன பெரமுன உறுதியளிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்று கோத்தாபய ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அதை ஏற்றுக்கொள்ளும் துணிவு சஜித்துக்கு இருக்கவில்லை.

இக்கட்டான சூழலில் ரணில் தான் முன்வந்து நாட்டைப் பொறுப்பேற்று இன்று அனைவரும் சுதந்திரமாக வாழக்கூடிய நாட்டை உருவாக்கியுள்ளார். பெரமுனவினராகிய நாங்கள், இந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லத் தேவையான ஆதரவை வழங்குவோம். கோத்தாபய ராஜபக்சவுக்கு நடந்தது ரணிலுக்கும் நடக்க நாம் அனுமதிக்கமாட்டோம். இது அரசியல் பிரச்சினை அல்ல' - என்றார். (எ-இ)

## அமைச்சுப் பதவி விடயத்தில் விரைவில் ரணில் சாதக முடிவு

அமைச்சுப் பதவி இல்லாத காரணத்தால் பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்கள் அதிருப்தியடைந்துள்ளமை நியாயமானதே. அமைச்சுப் பதவி தொடர்பில் ஜனாதிபதி வெகுவிரைவில் சாதகமான தீர்மானத்தை எடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்காவிடில் அவர்கள் எதிர்க்கட்சிக்குச் செல்வர் என்று கூறப்படுவது அடிப்படையற்றது.

நாடாளுமன்றத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கவேண்டும் என்று உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்தோம். பல்வேறு காரணங்களால் நிலையான அமைச்சரவை இழுபறி நிலையில் உள்ளது. இன்றைய நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆளும் தரப்பு கட்சித் தலைவர் கூட்டத்தில் அமைச்சுப் பதவி தொடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை - என்றார். (எ-இ)

## இசை நிகழ்ச்சி நடத்த நேரக்கட்டுப்பாடு தளர்வு

கொழும்பு, ஜூன் 23

இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இசை நிகழ்ச்சிகளை நடத்த இதுவரை காலமும் இரவு 10 மணிவரை மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரவு 1 மணிவரையும், ஞாயிற்றுக்கிழமையில் இரவு 12.30 மணிவரையும் இசை நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் ஒருவர் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மனு மீதான தீர்ப்பிலேயே உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது - என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழரின் பூர்வீகக் கிராமங்களான

# தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளத்தில் தமிழ் மக்களை மீள்குடியமர்த்துங்கள்

### வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூன் 23

**தமிழர்களின் பூர்வீகப் பகுதிகளான தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் கிராமங்களில் தமிழ்மக்கள் மீள்குடியர்த்தப்படவேண்டும். இந்தக் காணிகள் அனைத்தும் எமது வாழ்வாதார விவசாயக் காணிகளே - என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

குருந்தூர்மலைக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் கம்மன்பிலவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ்மக்கள் 1984ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தனர். இன்னமும் அவர்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்த்தப்படவில்லை.

தண்ணிமுறிப்புப் பகுதியிலுள்ள குருந்தூர்மலை ஆக்கிரமிக்கப்பட்டு நீதிமன்றக் கட்டளையையும் மீறி பௌத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனவாதத்தைத் தூண்டும் விதமாக இங்கு வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். தெற்கிலே தமது வாக்குவங்கியைப் பலப்படுத்துவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

குருந்தூர்மலையை அண்டிய பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய 306 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றது. இந்தக் காணிகள் அனைத்தும் எமது தமிழ் மக்களுடைய வாழ்வாதார விவசாயக் காணிகளாகும்.

இந்தக் காணிகளை அபகரித்து பௌத்த விகாரைகளை அமைத்து, சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முனைப்புப்பெறுகின்றன.

எமது பூர்விக பகுதிகளான தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களில் தமிழ் மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டும். - என்றார். (ச-246)

# திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 23

வட்டுக்கோட்டை சித்தங்கேணி பிள்ளையார் ஆலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்த பணம், கைபேசி உள்ளடங்கலாக பல ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளன என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

ஆலயத்துக்கு தரிசிப்பதற்காக வந்த பெண்ணொருவர் மோட்டார் சைக்கிளை ஆலய வளாகத்தில் நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார். பின்னர் வந்துபார்த்தபோது மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த 80 ஆயிரம் ரூபா மதிக்கத்தக்க தொலைபேசி, ஒரு தொகை பணம், தேசிய அடையாள அட்டை உட்படப் பல ஆவணங்கள் திருடப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

அதையடுத்து அந்தப் பெண் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டுக்கமைய சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)

யாழ்ப்பாணம், ஜூன் 23

வீட்டினுள் நுழைந்து நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன எனக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் நீர்வேலிப்பகுதியில் இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. வீட்டிலுள்ள இருவரும் வேலைக்குச் செல்பவர்கள் எனவும் வீட்டின் சாவி மறைத்துவைக்கப்பட்ட நிலையில், சாவியை எடுத்து திறந்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் 2 பவுண் நகை மற்றும் 20ஆயிரம் ரூபா என்பவற்றை களவாடிச் சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-26-125)

## போதைப்பொருள் பாவனை

# மறுவாழ்வுச் சிகிச்சைக்காக இதுவரை 100 பேர் இணைவு!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்.போதனா மருத்துவமனையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் போதைப்பொருள் புனர்வாழ்வுக்காக 100 பேர் வரை சிகிச்சை பெற்று வருகின்றனர் என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றக் கட்டளைகளுக்கு அமைவாக சிறைக்கைதிகள் உள்ளடங்கலாக பலர் சிகிச்சை பெறுகின்றனர்.

இதேவேளை கடந்த வருடம் 333 பேர் சிகிச்சை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# கைது!

வவுனியா, ஜூன் 23

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேக நபர் வவுனியா சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, குருமன்காட்டில் இரண்டு வீடுகளில் 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபா மற்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை திருடியமை, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடியமை, ஆலயமொன்றில் கோயில் உண்டியல் உடைத்து பணம் மற்றும் ஒலிபெருக்கி திருடியமை உள்ளிட்டவை தொடர்பாக முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன.

முறைப்பாடுகளுக்கமைய 21 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-110)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண மாணவர்கள் மத்தியில் உயர்தரத்தில் பிரதான பாடங்களில் ஒன்றாக மாணவர்கள் தெரிவு செய்யக்கூடிய ஆங்கில இலக்கியம் எனும் பாடம் (பொது ஆங்கிலமல்ல) தொடர்பிலான அறிவூட்டும் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் புதிய பரீட்சை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 2023, 2024, 2025 ஆகிய வருடங்களிலே இடம்பெறவிருக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளிலேயே ஆங்கில பாடத்துக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள், தற்போது தரம் -10 மற்றும் தரம் - 11 இல் பயிலும் எதிர்காலத்தில் உயர்தரத்தில் ஆங்கில பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகத் தெரிவுசெய்ய விரும்பும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினர் அறிவித்துள்ளனர். (ச-ரி2)

# கண்புரை சத்திரசிகிச்சை கரவெட்டியில் பயனாளர் தெரிவு!

கரவெட்டிப் பிரதேசத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவுசெய்யும் கண்பரிசோதனைமுகாம் நெல்லியடி மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் இதில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யமுடியும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். தெரிவுசெய்யப்படும் கண்புரை நோயாளிகளுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் இலவசமாகக் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# 'துலங்கும் வர்ணங்கள்' மழலை ஓவியக்காட்சி

சாவகச்சேரியிலுள்ள ரி.பி.ஹன்ட் நினைவு ஓவியக்கூடத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஓவியக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

'துலங்கும் வர்ணங்கள்' தொனிப்பொருளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கைவண்ணங்கள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓவியக்கூட மண்டபத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.

நிறுவுநர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி செயலக வடக்கு - கிழக்கு அபிவிருத்தி அலகில் மேலதிக செயலாளர் இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட பீடாதிபதி ச. சிவரூபன், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதிவண. கலாநிதி வே.பத்மதயாளன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி3-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நல்லதம்பி அகிலேஸ்வரன் (காந்தி)

(புங்குடுதீவு 07, யாழ்ப்பாணம்)

தோற்றம் 01.03.1952 — மறைவு 04.07.2022

அப்பா உங்கள் குரல் கேட்டு
ஆண்டொன்று ஓடிப் போனது
அருகில் நீங்கள் இருந்த காலமெலாம்
மனக்காட்சியாய் மாறிப் போனது!
கலங்கும் எமக்கு மட்டுமே தெரியும்
உங்களைப் போல் யாரொருவரும்
இல்லை அப்பா...!
என்றும் உயிரினில் கலந்த எம் உறவே
ஆண்டொன்றென்ன - எம் ஆயுள் வரை
உம் நீங்காத நினைவுடனே பயணிக்கும் -
எம் ஜீவன்கள்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

இல. 123, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(CS/50950)AH-1

---

ஓம் விராட் விஷ்வ பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 11 - 1953



மறைவு 21 - 06 - 2023

## திரு. மயில்வாகனம் பாலச்சந்திரன் (சந்திரன்)

(சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர்)

யாழ்/திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், மூளாயைப் பூர்வீகமாகவும் கொண்ட, சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை உரிமையாளருமான திரு. மயில்வாகனம் பாலச்சந்திரன் (சந்திரன்) நேற்று முன்தினம் (21.06.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அனுசியாவின் அன்புக் கணவரும், காமாச்சி மற்றும் காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் மூத்த புதல்வனும், துரைச்சாமி அம்புசத்தின் அன்பு மருமகனும், ஜீத்தா (France), நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்டனி தினேஸ்குமார் அவர்களின் அன்பு மாமனாரும், அன்டர்சன், அனாமிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0033 758 632163
076 841 8108

தகவல் (மகள்) மகன்
தினேஸ் ஜீத்தா
பா.நிதர்சன்

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (26.05.2023) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த
எமது அன்புத் தந்தை

அமரர்

## சின்னத்துரை தவகுணபாலநாதன்

(S.T.கார்க்கார நாதன்)

"கற்பகம்" இன்சுவையக - உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்னதினம் (21.06.2023) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முல்லை வீதி,
4 ஆம் ஒழுங்கை, பரந்தன்

**குடும்பத்தினர்.**

(cs.50958) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடியை ஒழிக்க காத்திரமான சட்டம் தேவை



## குமார வெல்கம வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 23**

**யார் ஆட்சிக்கு வந்தாலும் ஊழலை இல்லாதொழிக்க முடியாதுள்ளது. ஊழல் என்பது புதியதொரு விடயமல்ல. மன்னர் காலத்திலிருந்தே ஊழல் புரையோடிப்போய் காணப்படுகிறது. உருவாக்கப்படவுள்ள ஊழல் எதிர்ப்புச் சட்டம் கடந்த கால மோசடிக்களையும் களையும் வகையில் காத்திரமாக அமையவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவில் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மோசடி செய்யப்பட்ட அரச நிதியை மீண்டும் அரசுடமையாக்குவதாக நல்லாட்சி அரசாங்கத்தில் குறிப்பிடப்பட்டது. இதற்காக பிரத்தியேக பிரிவு உருவாக்கப்பட்டது. அலரிமாளிகையில் சிறப்புக் காரியாலயம் உருவாக்கப்பட்டது. இறுதியில் ஒருவர் கூட சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

யார் ஆட்சிக்கு வந்தாலும் ஊழலை இல்லாதொழிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. இனியாவது காலத்துக்குத் தேவையான சட்டங்களை இயற்றி ஊழலை ஒழிக்கும் காத்திரமான சட்டத்தை கொண்டுவர வேண்டும் - என்றார். (ச-ரி2)

### எரிவாயு தேவைப் பூர்த்திக்கு

## 600 மெகாவோட் சக்தியில் திரவ எரிபொருள் நிலையம்

கொழும்பு, ஜூன் 23

நாட்டில் இயற்கை எரிவாயு தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் விரைவில் 600 மெகாவோட் சக்தி அளவைக் கொண்ட திரவ எரிபொருள் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்காக இந்திய எரிசக்தி நிறுவனமொன்று, விரைவான குறுகிய காலத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மின்சக்தி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் 600 மெகாவோட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து அடுத்த 24 மாதங்களுக்கு திரவ இயற்கை எரிவாயுவைப் பெற்று மின்சார சபையின் செலவைக் குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு, இந்திய நிறுவன அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ச-ரி3)

## இராணுவ பஸ் மோதியதில் சிறுமி தலை சிதறிப் பலி!

### தாய் படுகாயம்

கொழும்பு, ஜூன் 23

இராணுவத்தினர் பயணித்த பஸ் ஒன்று, ஸ்கூட்டர் ஒன்றுடன் மோதியதில் ஸ்கூட்டரில் பயணித்த மூன்று வயதுச் சிறுமி தலை சிதைவடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரின் தாயார் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சோகச் சம்பவம் பண்டாரகம பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்காளரான தாயாருடன், சிறுமி ஸ்கூட்டரில் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். களுத்துறையில் இருந்து இராணுவத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் பண்டாரகமவில் இருந்து கெஸ்பேவ நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

விபத்தையடுத்து சிறுமியும் அவரது தாயாரும் பண்டாரகம மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எனினும் சிறுமி தலை சிதைவடைந்து ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-22)

## சீனாவுக்கு பறக்கிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 23

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவுக்கு எதிர்வரும் 24 முதல் 30 ஆம் திகதி வரையில் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது ருவிற்றர் பதிவில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது. சீன அரசவை உறுப்பினரும் வெளியுறவு அமைச்சருமான குயின் கேங்கின் அழைப்பின் பேரில் அமைச்சர் அலி சப்ரி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு அவசியமான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது குறித்து சீன அரசாங்கத்துடன் விசேட கலந்துரையாடலை முன்னெடுக்கவுள்ளார். (ச-ரி2)

## யானை தாக்கி இருவர் பலி!

கொழும்பு, ஜூன் 23

பொலநறுவையில் இரு வேறு இடங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை யானைத் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்துள்ளனர்.

வெலிகந்தையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவர் வயல் காவலுக்காக நின்ற வேளை யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை மொனராகலையைச் சேர்ந்த 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் வேலைமுடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய போது யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி3-22)





### ஊழல் எதிர்ப்புச் சட்டத்தால்

## கடந்தகால மோசடியும் களையப்படவேண்டும்

### எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 23

ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவு கடந்த கால மோசடிகள் தொடர்பாகவும் விசாரணைக்குட்படுத்தும் வகையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும். எதிர்காலத்துக்கு மாத்திரம் செல்லுபடியாகும் வரை நடைமுறைப்படுத்துவதாக அமைந்தால் அரசின் நோக்கம் வெளிப்படும் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஊழல் எதிர்ப்பு சட்டவரைவை சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் கருத்தொன்றுக்கு மறுப்புத் தெரிவித்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது: ராஜபக்சக்களின் ஆட்சிக்கால ஊழல் மோசடிகள் இந்த அரசாங்கத்தால் மறுக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊழல் மோசடியால் நாட்டு மக்களின் சுகாதாரப் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. அரசாங்கம் முன்வைத்திருக்கும் ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவு கடந்த கால மோசடிகளையும் தண்டிக்கவேண்டும் - என்றார்.

அதற்கு நீதியமைச்சர் பதிலளிக்கையில், கடந்தகால மோசடிகளுக்கும் இந்தச் சட்டம் செல்லுபடியாகும் வகையில் தனியான உறுப்புரை ஒன்றை ஏற்படுத்த சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளவேண்டியேற்படும். அதற்குச் சட்டமா அதிபரையும் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் இணைத்து இது தொடர்பாக கலந்துரையாட நாங்கள் தயார் - என்றார். (ச-இ)

## யாழ். பண்பாட்டு பெருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் சி. சிவபாலசுந்தரன் பங்கேற்று சிறப்பிக்கவுள் ளார் என யாழ்ப்பாண பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (ச-ரி2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுமி மாயம்; இளைஞன் கைது!

## இளைஞனின் பெற்றோரும் மறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பதின்ம வயதுச் சிறுமியைக் காணவில்லை என்று சிறுமியின் பெற்றோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் இளைஞர் ஒருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றச்செயலுக்கு உதவிய குற்றச்சாட்டில் இளைஞரின் பெற்றோரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

16 வயதுச் சிறுமி ஒருவரைக் காணவில்லை என்று சிறுமியின் பெற்றோர் சில தினங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், 20 வயது இளைஞர் ஒருவரின் வீட்டிலிருந்து சிறுமியை மீட்டு மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

அந்த வீட்டில் இருந்த இளைஞர் கைது செய்யப்பட்டு ஆள்கவர்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் இளைஞரை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. இளைஞரின் வீட்டில் அவரது பெற்றோரும் வசித்த நிலையில், குற்றச் செயலுக்கு உதவிய குற்றச்சாட்டில் அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவும் உத்தரவிடப்பட்டது. அதற்கமைய பெற்றோர் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களையும் எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-26)

தொல்புரம்

## வழக்கம்பரை அம்மன் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 23

தொல்புரம்- வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மகோற்சவம் 10 தினங்கள் இடம்பெறும். அதற்கமைய எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)

### மாணவிகளின்...

பட்டு அந்தக் குழுவின் நடவடிக்கை ஆசிரியைகளால் கையாளப்படவேண்டும் என்றும், மாணவிகள் தொடர்பான அவதானிப்புக்கள் அதில் பதிவிடப்பட வேண்டும் என்றும் பொலிஸாரால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்ன நேற்று இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதின்ம வய்தினர் மீதான குற்றங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாணவிகளின் வரவு உட்பட அவர்கள் தொடர்பான ஆசிரியர்களின் அவதானிப்புக்களை மாணவிகளின் பெற்றோர், பாதுகாவலர் பார்க்கும் வகையில் வட்ஸ்அப் குழுக்களை உருவாக்க வேண்டும் என்றும், இந்தக் குழுக்கள் ஆசிரியைகளாலேயே கையாளப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

மாணவிகள் பாடசாலைக்கு சமுகமளிக்காவிட்டால் உடனடியாக இந்தக் குழுக்கள் ஊடாகப் பெற்றோருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், மாணவிகள் பாடசாலைக்கு வரும் வாகன விவரங்கள், சாரதிகளின் அலைபேசி இலக்கங்கள் போன்றவையும் இந்தக் குழுக்களில் பகிரப்படவேண்டும் என்றும் இந்த விடயத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் -என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

### மனிதப்புதைகுழி...

இலங்கைத்தீவின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள காணாமற்போனோருக்காக நீதிதேடும் குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும் அந்தக் குழுக்கள், புதைகுழிகளின் அகழ்வுப் பணிகளில் இடம்பெற்ற திட்டமிட்ட தவறுகளின் மாதிரிகளை விளக்கமாகக் கூறும் ஓர் அறிக்கையையும், காணாமற்போனோருக்காக நீதிதேடும் குடும்பங்களின் அவலநிலை தொடர்பான ஆவணப்படம் ஒன்றையும் நேற்று வெளியிட்டுள்ளன.

'30 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டும், 20 இடங்களில் அகழ்வுப் பணிகளுக்கு முயற்சி செய்தும், ஒருசில சடலங்களே அடையாளம் காணப்பட்டு, உரிய குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இலங்கைத்தீவு முழுவதிலும், ஆழமற்ற புதைகுழிகளில் பல்லாயிரக் கணக்கான சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம். அதனால் அகழ்வுப் பணிகளில் பெரியளவில் முன்னேற்றம் ஏற்படாத மோசமான நிலைமையை வெறுமனே துரதிர்ஷ்டம் என்று வர்ணித்துவிடமுடியாது. இதற்குக் காரணம் அரசியல் விருப்பமின்மையே என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நாங்கள் உண்மைகளை நாட்டில் குழி தோண்டிப் புதைப்பதில்தான் கெட்டிக்காரர்கள். அவற்றை வெளியில் தோண்டி எடுப்பதில் அல்ல. காணாமற்போனவர்களின் குடும்பங்களிடமிருந்து மரணத்திற்கு முந்தைய தரவுகளை சேகரிக்க வேண்டிய தேவையும், நாட்டில் இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கும் நூற்றுக்கணக்கிலான புதைகுழிகளின் அமைவிடங்களை சர்வதேச வல்லுநர்களின் உதவியுடன் கண்டுபிடிக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. இதற்குப் பின்னர்தான் அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்படல்வேண்டும்.

குற்றவாளிகளுக்கு இது ஒரு காத்திருப்பு விளையாட்டு. இன்னும் போதுமான காலம் இழுத்தடித்தால், குடும்பங்கள் எல்லாம் இறந்துபோய், அதற்குப் பின்னர் யாருமே நீதிக்காகப் போராடமாட்டார்கள் என்று அவர்கள் நம்புகின்றார்கள். அதனால் இவ்விடயத்தினை நாங்கள் அவசரமாகத் தீர்த்துவைக்க வேண்டும்' என்று அந்த அழுத்தக் குழுக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (அ-ம-6)

### வாரம்...

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றத்துக்கு விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை மூலம் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் வடக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தில் அரசாங்கத்தின் செலவில் 450 மில்லியன் ரூபா செலவில் முனையத்துக்கான கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

காங்கேசன்துறைக்கான முதலாவது கப்பல் அண்மையில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தது. இந்தியாவின் சுற்றுலாப் பயணிகள் சுமார் 500 பேருக்கு அதிகமானோர் அதில் வருகை தந்திருந்தனர். இந்த கப்பல் சேவையை வாரத்துக்கு ஒருமுறை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

வடக்கு மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கிணங்க பலாலி விமான நிலையத்தை நாம் நிர்மா ணித்து வழங்கியுள்ளோம். வாரத்துக்கு நான்கு தினங்கள் விமான சேவைகள் இடம்பெறுகின்றன. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை விமானப்பயணச் சீட்டுக் கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அந்த விமானசேவையை 7 நாள்களுக்கும் தொடர்வதற்கு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

வேறு விமானசேவை நிறுவனங்களும் விமானசேவைகளை முன்னெடுப்பதற்கு முன்வந்தால் அதற்கு அனுமதி வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம். சென்னைக்கும் பலாலிக்குமிடையில் அந்த விமானசேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பெரிய விமானங்களை அங்கு தரையிறக்கும் வகையில் விமான ஓடுபாதைகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. அது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25.05.1943 திரு. அம்பலவாணர் தில்லையம்பலம் (சிற்பாசாரியார்) இறப்பு 21.06.2023



அராலியைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தில்லையம்பலம் நேற்றுமுன்தினம் (21.06.2023) புதன்கிழமை இறைவனடிசேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: 076 150 7531 குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 • 10 • 1948



மறைவு 15 • 06 • 2021

அமரர்

**கிருஷ்ணபிள்ளை செல்வராசா**

இமைமூடும் நேரத்தில் எங்களை விட்டுப் பிரிந்தாய்
நாங்கள் இருக்கும் வரை உங்கள் நினைவில் தான்
இருப்போம் என்றும்.....

பிரிவால் வாடும்....

(CS/50931)AH-1 குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரேனியர்களின் துன்பத்தை ஈழத்தமிழர்கள் உணர்வார்கள்!



## நாடாளுமன்றத்தில் சிறீதரன் கவலை

**கொழும்பு, ஜூன் 23**

**உக்ரேனியர்களின் வலிகளையும், துன்பத்தையும் ஆகப்பெரும் அவலங்களை எதிர்கொண்ட ஓர் இனமாக, ஈழத்தமிழர்கள் நன்கு உணர்வார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நிகழ்ந்தேறிய உள்நாட்டுப் போரினால், சர்வதேச வரலாற்றில் எங்கும் பார்த்திருக்கவோ, பதிந்திருக்கவோ முடியாத ஆகப்பெரும் அவலங்களை எதிர்கொண்ட ஓர் இனமாக, இழப்பின் வலிசுமந்து நிற்கும் உக்ரைன் மக்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம்.

சொந்த நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்தலும், நாடற்ற மனிதர்களாக ஏதிலிகளாக்கப்படுவதும் எத்தனை கொடியது என்பதை, அனுபவ ரீதியாகக் கண்டுகொண்ட தமிழர்களாகிய நாம், தமக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதப் பேரவலமொன்றின் விளிம்புநிலையில் நின்று, ஏதிலிகளாக அந்தரிக்கும் உக்ரேனியர்களுக்கு, இதேநிலை தொடரக் கூடாது என்பதை உணரத்தலைப்பட்டிருக்கிறோம்.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் போரின்போது, உக்ரைன் இலங்கை அரசுக்கு தனது பரிபூரண ஆதரவை வழங்கியிருந்தது. குறிப்பாக 61 மாணவிகளின் உயிரைக் குடித்த, செஞ்சோலைப் படுகொலை உள்ளிட்ட பல விமானத் தாக்குதல்களின்போது, அத்தகைய குண்டுவீசும் விமானங்களை உக்ரேனியர்களே செலுத்தியிருந்தனர். இறுதிப்போரின் இறுதி நாள்களில், பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களை நோக்கி, தமது உயிரைக் காக்கும் ஒரே எண்ணத்தோடு எமது மக்கள் திரண்டிருந்தபோது, அந்த இடங்களில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களிலும் உக்ரேனியர்களின் நேரடிப் பங்கிருந்தது. ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் காட்சிகளை தொலைக்காட்சிகளிலும், இணையத்தளங்களிலும் காணொலிகளாகப் பார்க்கின்றபோது, உக்ரைனில் வீசக்கூடியதான இரத்த வாடையை இங்கிருந்தபடியே என்னால் நுகர்ந்து உணர முடிகின்றது.

உலகில் எங்கு யுத்தம் நடந்தாலும் அந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்த எங்களால் முடியுமா? என்று யோசித்துப் பார்ப்போம். இலங்கை சிறிய நாடுதான். அவ்வாறிருக்க வல்லரசுகளின் விளையாட்டைத் தடுக்க ஏதாவது செய்யலாமா என்று யோசிப்பதே பலருக்கு நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால் போர் தந்த விளைவுகளின் துயர்சுமந்திருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் வகையில், கனேடிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை போல, கனேடியப் பிரதமரின் அறிக்கையைப் போல, உக்ரைனின் சமாதானத்துக்காக, உக்ரேனியர்களின் நல்வாழ்வுக்காக இந்த மன்றம் குறைந்தது ஒரு பிரேரணையையாவது நிறைவேற்றலாம். அங்கு காவுகொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் உயிர்களுக்காக சில நிமிட மௌன அஞ்சலியையாவது நாம் செலுத்தலாம் - என்றுள்ளது. (ம-113-125)

## கேள்வி அறிவித்தல்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) - 2023
## வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை

01 தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நெடுஞ்சாலை அமைப்பிற்கான சீடா (CIDA) பதிவுள்ளவராகவும். கறுப்புப் பட்டியலில் (Black List) பெயர் இடம் பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் (தொலைபேசி 024-2260914/ 024-2260055, தொலைநகல் 024-2260913, மின்னஞ்சல் - techvckps@gmail.com/ cheddips @gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 23/06/2023 ஆம் திகதியிலிருந்து வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் எனும் இடத்திலிருந்து 23/06/2023 ஆம் திகதியிலிருந்து 06/07/2023 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/= (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/ செயலாளர், வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் எனும் முகவரிக்கு 07/07/2023 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். கேள்வி மனுப்பத்திரத்துடன் சீடா (CIDA) புத்தகத்தின் ஒப்பந்தகாரரின் விபரம் மற்றும் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த வேலைகளின் விபரம் அடங்கிய பக்கங்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியிலிருந்து 77 நாட்கள் வரையும் (22/09/2023) செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபா மில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/43(6)/5/3-2(01)/2023 | தட்டாங்குளம் 2ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 5.21 | 84 நாட்கள் | C6/C7 and C8 வீதி | 52,000.00 | 20/10/2023 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 30/06/2023 மு.ப 10.30 க்கு வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை.**
**23.06.2023**

(CR/40184)AH-1

## யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வது
## பதிவு இலக்கம் - J/1609
## பகிரங்க மூடிய கூறுவிலை

யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கீழ்வரும் ஆதனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

1. Boiler and Thermic fluid heater
2. Drying dyeing roller units.
3. Fuel storages tanks
4. **பழைய இயந்திர உபகரணங்களும் பழைய இரும்புகளும்**
5. **பழைய மரத்தளபாடங்கள் தறிகள் மற்றும் யன்னல் நிலைகள்**

மேற்படி பொறியை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் இதற்கான விண்ணப்ப படிவத்தினை ரூபா 1000.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையினை செலுத்தி எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி சொத்தினை பார்வையிட விரும்புபவர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பார்வையிடலாம்.

விண்ணப்பப்படிவங்களை 10.07.2023ம் திகதிக்கு முன்னர் **தலைவர், யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில்** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சொத்து விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட வேண்டும். மூடிய கூறுவிலைகள் 12.07.2023ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நிர்வாக சபை உறுப்பினர் முன்னிலையில் திறக்கப்படும் என்பதுடன் நிர்வாக சபையால் முடிவு செய்யப்படும்.

**தலைவர்**
**யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.**
**தொலைபேசி இல: 021 321 8263**

(CR/40181)AH-1

## கண்ணீர் அஞ்சலி

## ஜெயலட்சுமி அம்மா செல்வரத்தினம்

**(வீரபத்திரர் பேச்சி அம்மன் தர்மகர்த்தா)**



சங்கானையைப் பிறப்பிடமாகவும்,
நீர்வேலி தெற்கை
வசிப்பிடமாகவும், லண்டனை
தற்போதைய வசிப்பிடமாகவும்
கொண்ட **ஜெயலட்சுமி அம்மா**
**செல்வரத்தினம்**
கடந்த (18.06.2023)
ஞாயிற்றுக்கிழமை காலமானர்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

**அசோ, செல்வராணி**
**உறவினர்.**

(CS/50956)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகள் தாக்குதல்; வாழ்வாதாரம் துவம்சம்!

## கல்மடுநகர் மக்கள் வேதனை



**கிளிநொச்சி, ஜூன் 23**

**கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் காட்டு யானைகள் புகுந்து பயிர்களை நாசம் செய்துவருவதால் வாழ்வாதாரப் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இரவு வேளைகளில் கிராமத்துக்குள் நுழையும் யானைகள் வாழ்வாதாரப் பயிர்களான தென்னை, வாழை, மரவள்ளி உள்ளிட்ட வாழ்வாதாரப் பயிர்களை துவம்சம் செய்து வருகின்றன. அதனால் நிதியிழப்பை சந்தித்து வருகின்றோம்.

அத்துடன் யானைகளின் நடமாட்டத்தால் இரவுவேளைகளை அச்சத்துடன் கழிக்க வேண்டியுள்ளது.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதும் இதுவரை எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யானைகளைக் கட்டுப்படுத்தி எமது வாழ்வாதாரத்தையும் அச்சமின்றிய வாழ்வையும் உறுதிப்படுத்த நிரந்தரத் தீர்வு பெற்று தர வேண்டும் - என்றனர். (ச-113)

# கட்சியிலிருந்து பிரிந்து சென்று காட்டிக்கொடுக்கத் தயாரில்லை

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பிலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் நான் அறிவேன். எனினும் அது தொடர்பில் என்னால் கருத்துகளை வெளியிடமுடியாது. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி, அந்தக் கட்சியைக் காட்டிக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. எல்லாப் பகுதிகளிலும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. புலிகளின் அனைத்து ஆயுதங்களும் எம்மால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. எனவே பாதாள உலகக் குழுவினர் புலிகளின் ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

ஆனால் பாதாள உலகக்குழுவினருக்கு இன்று ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது கடினமான விடயமல்ல. நாட்டில் பல விடயங்கள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் அதிகாரம் முறையாகப் பயன்படுத்தப்படாமையே இதற்கான காரணமாகும். ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து யார் அரசாங்கத்துடன் இணைவார்கள் என என்னால் கூறமுடியாது. எனினும் ஜனாதிபதியுடன் தொடர்பிலுள்ள சிலர் பற்றி நாம் அறிவோம். அது தொடர்பில் என்னால் எவ்வித கருத்துகளையும் தெரிவிக்கமுடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா? எனக் கேட்டு என்னை அசௌகரியத்துக்கு உள்ளாக்க வேண்டாம். எனினும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகிச் சென்று, அந்தக் கட்சியைக் காட்டிக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை - என்றார். (எ-இ)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை, இசைத் துறை, உயர் பட்டப் படிப்புகள் பீடம், சைவசித்தாந்த முதுமாணிக் கற்கை அணி இணைந்து நடத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பல்கலைக்கழகப் பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன், யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய-66)

# கிராமமக்கள் மீது துப்பாக்கிச்சூடு!

## மூவர் காயம்!



அம்பாந்தோட்டை, ஜூன் 23

கிராமமக்கள் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொண்டதில் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை, வலஸ்முல்ல, யஹல்முல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. தனது வீட்டுக்கு அருகில் நீர்க்குழாய் அமைப்பதற்காக வடிகால் ஒன்றைத் தோண்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு கூடிய மக்கள் மீதே அவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை வலஸ்முல்ல பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-ரி3)



# உருக்குலைந்த சடலம் வல்லைவெளியில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் வல்லை தொண்டைமானாறு வீதியின் அருகேயுள்ள வெற்றுக்காணியொன்றில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்

சடலம் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்து காணப்படுகிறது எனவும் இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)



# மணல் அகழ்வு சாரதி கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 23

சாவகச்சேரி கனகம்புளியடிச் சந்தியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணலேற்றிச் சென்ற டிப்பர் சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

மணலகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை சாவகச்சேரி பொலிஸார் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவுள்ளனர். (ச-ரி2-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்குடன் ஹெரோய்ன் கடத்தல்

கொள்கலன் ஒன்றிலிருந்து சுமார் 64 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 15 கிலோ கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என இலங்கை சுங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானிலிருந்து வந்த கொள்கலன் ஒன்றிலேயே இந்த ஹெரோய்ன் தொகை கைப்பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யும் போர்வையில் ஹெரோய்ன் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது எனவும் சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளையும் சந்தேகநபர்களையும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-ரி2-இ)

# வட்டு. கண்ணலிங்கேஸ்வருக்கு நாளைமறுதினம் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத் தேர்த்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தத் திருவிழா, கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. தேர்த் திருவிழாவானது நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடேசரபிஷேகத்தை தொடர்ந்து காலை 6 மணிக்கு ஆனி உத்தர தரிசனம் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து சுவாமியின் தீர்த்தோற்சவம் முற்பகல் 11.30 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் இடம் பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

# குருதிக் கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 23

உரும்பிராய் பரிசுத்த இம்மானுவேல் ஆலயத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடை முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்களும், ஆர்வலர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். (எ-66)

## அந்தியேட்டிக்கிரியையும், நன்றி நவிலலும்

மலர்வு 26 - 10 - 1936



உதிர்வு 24 - 05 - 2023

கடந்த 24.05.2023 இல் சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### திரு. சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன்

(வெண்சங்கு திரைப்பட கதாநாயகன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (21.06.2023) புதன்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் காலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 24.05.2023 இல் சிவபதமடைந்த எமது குடும்த்தலைவர் சங்கரப்பிள்ளை புவனேஸ்வரனின் மரணச்செய்தி கேட்டு உடனடியாக சமூகமளித்த அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

55, மணல்தரை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனைவி - பாரததேவி

(cs.50941) (N-1)

# கேள்வி அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2023

01. செயலாளர், பெறுகைக்குழு, வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. நிதி அமைச்சின் பொது நிதி திணைக்கள சுற்றுநிருபம் 04/2016(III) படி தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அட்டவணையில் குறிப்பிட்டதற்கு இணங்க பொருத்தமான தரத்தில் சிடா (ICTAD/CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி (தொலைபேசி: 024-2053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2023.06.23 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி எனும் அலுவலகத்திலிருந்து 2023.06.23 ஆம் திகதியிலிருந்து 2023.07.07 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/ (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 2023.07.07 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள்) 2023.09.08 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/VU/VNPS/W/05/2023 | The Construction of Mettaling & Tarring at Nedunkeny Marayiluppai Road | 5.022 | 84 Days | C8, C7 and C6 | 50,250.00 | 2023.10.06 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2023.06.30 ம் திகதி 10.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்

**பெறுகைக்குழு,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி,**
**2023.06.22**

(cr.38096) (N - 1)

# கேள்வி அறிவித்தல்

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) - 2023

01. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நெளுக்குளம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் 04/2016(iv)ம் இலக்க 2023.02.09 ம் திகதிய பொதுநிதிசுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை வடமாகாணத்தில் மேற்கொண்டிருத்தல் வேண்டும்
04. தேவையான தகமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், **வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம் வவுனியா** (தொலைபேசி: 0242225737, தொலைநகல்- 0242050067, மின்னஞ்சல் npvstps@ yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **2023.06.23** திகதியிலிருந்து **2023.07.06** வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணத் தினை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான **ஆங்கில மொழியிலான** கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து **செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நெளுக்குளம்** எனும் அலுவலகத்தில் **2023.06.23** ஆம் திகதியிலிருந்து **2023.07.06** வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.2000/** (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரிய குளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** எனும் முகவரிக்கு 2023.07.07 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து **77 நாட்கள்** (எழுபத்து ஏழு நாட்கள் - **2023.09.22)** வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரு) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/NP/VN/VSTPS/2023/02 | Metaling and tarring work at Nelukkulam cemetery road in VSTPS | 7.82 | 98 நாட்கள் | C8, C7 and C6 highway | 79,000.00 | 2023:10.20 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **2023.06.30 ம் திகதி 14.30** மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நெளுக்குளம், வவுனியா.**
**2023.06.23**

(CR/40180)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று லட்சம் பேருக்கு வெளிநாட்டில் வேலை!

இந்த ஆண்டு 3 லட்சம் இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

41 நாடுகளில் இருந்து 1.2 மில்லியனுக்கும் அதிகமான வேலை வாய்ப்பு உத்தரவுகள் கிடைத்துள் ளன. திறன் மற்றும் மொழித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நபர்களுக்கே பெரும்பான்மையான வேலைகள் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். திறன் மற்றும் மொழிப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இலங்கையர்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குத் தயாார்ப்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)


## முதியோர் காப்பக அனுமதி

யாழ் அம்மா முதியோர் காப்பகத்தில் முதியோர் பராமரிப்பதற்கு 35,000/= ரூபா முதல் அறவிடப்படுகின்றது. மேலும் பராமரிப்பதற்கான வேலையாட்களும் தேவை.

077 712 6859

(CS2495)AH-1



## சேவை நலன் பாராட்டு

Congratulations



யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் உதவி ஆணையாளராகவும், பிரதி ஆணையாளராகவும் 04.12.2013 இல் இலிருந்து 21.06.2023 வரை தன்னலமற்ற அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றி நேற்று (22.06.2023) வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள மதிப்பிற்குரிய

**திரு.இரத்தினகுமார்-நிஷாந்தன்** அவர்களை

பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ இறைவனின் திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Congratulations

கமக்கார அமைப்புகள்
கமநல சேவைகள் நிலையம் - சண்டிலிப்பாய்.

(cs.50334) (2N)



## சேவை நலன் பாராட்டு

Congratulations



யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் உதவி ஆணையாளராகவும், பிரதி ஆணையாளராகவும் 04.12.2013இல் இலிருந்து 21.06.2023 வரை அறிவும், ஆற்றலும், ஆளுமைத்திறனும் கூடிய, இளமைத் துடிப்போடும், நேர்மையோடும், அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றி நேற்று (22.06.2023) வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள மதிப்பிற்குரிய

**திரு.இரத்தினகுமார் நிஷாந்தன்** அவர்களை

வாழ்த்துவதோடும், உங்கள் சேவை சிறக்கவும் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ இறைவனின் திருவருள் வேண்டி நிற்கின்றோம்.

Congratulations

கமக்கார அமைப்புகள்
கமநல சேவைகள் நிலையம் - தாரைநகர்.



## RCIC-IRB

Regulated Canadian Immigration Consultant

# PURSUE IMMIGRATION CONSULTING SERVICES

May Your Canada Immigration Dreams Come True

- VISITOR VISA - SINGLE ENTRY
- VISITOR VISA - MULTIPLE ENTRY
- SUPER VISA
- STUDENT VISA
- REFUGEE CASES
- WORK VISA, LMIA
- PERMANENT RESIDENCY
- PNP APPLICATIONS
- SELF - EMPLOYED CATEGORY
- FAMILY SPONSORSHIPS
- BUSINESS INVESTORS
- REFUSAL CASES AND APPEALS
- PR CARD RENEWALS
- CITIZENSHIP APPLICATIONS

**Contact Us:**

0016479893136
0016472053136

vicky.aingkaran@gmail.com
30 Via Renzo Drive,
Richmond Hill,
ON, L4S 0B8, Canada.



VICKNESWARY AINGKARAN, MSC
REGULATED CANADIAN IMMIGRATION CONSULTANT -IRB
COMMISSIONER OF OATHS
A MEMBER OF CICC AND CAPIC





கொக்குவில் – நந்தாவில்

## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2023

அம்பிகை அடியார்களே!

நிகழும் சோபகிருது வருஷம் ஆனி 08 ஆம் நாள் (23.06.2023) வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் மேற்படி ஆலய மஹோற்சவம் ஆரம்பமாகி ஆனி 18ஆம் நாள் (03.07.2023) திங்கட்கிழமை அன்று பௌர்ணமி தின தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற அம்பிகையின் திருவருள் நிறைந்துள்ளது. அத்தருணம் அம்பாள் அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து இஷ்ட சக்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

### விஷேட உற்சவ தினங்கள்

| | |
|---|---|
| 23.06.2023 வெள்ளிக்கிழமை - கொடியேற்றம் (துவஜாரோகணம்) | - காலை 7.00 மணி அபிஷேகம் காலை 8.00 மணி வசந்த மண்டப பூசை. முற்பகல் 10.00 மணி கொடியேற்றம் |
| 25.06.2023 - ஞாயிற்றுக்கிழமை (மஞ்சத் திருவிழா) | - மாலை 5.00 மணி வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவீதி உலாவருவார். |
| 29.06.2023 - வியாழக்கிழமை (கைலாய வாகனத் திருவிழா) | - மாலை 5.00 மணி வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் கைலாய வாகனத்தில் திருவீதி உலாவருவார். |
| 01.07.2023 - சனிக்கிழமை (சப்பறத் திருவிழா) | - மாலை 5.00 மணி வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் சப்பறத்தில் திருவீதி உலாவருவார். |
| 02.07.2023 - ஞாயிற்றுக்கிழமை (தேர்த்திருவிழா) | - அதிகாலை 5.00 மணி அபிஷேகம். காலை 6.30 மணி வசந்த மண்டபப்பூசை. அதனைத் தொடர்ந்து இரதோற்சவம் நடைபெற்று. இரத அவரோகணம். பிராயச்சித்தம். நவசக்தி அர்ச்சனை என்பன நடைபெறும். |
| 03.07.2023 - திங்கட்கிழமை (தீர்த்தோற்சவம்) | - அதிகாலை 4.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் நடைபெறும். மாலை 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று கொடியிறக்கம் (துவஜா அவரோகணம்) நடைபெறும். |
| 04.07.2023 செவ்வாய்க்கிழமை (பூங்காவனத் திருவிழா) | - காலை 5.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று மாலை 5.30 மணிக்கு பூங்காவனத் திருவிழா நடைபெறும். |

தினமும் காலை 8.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும்.
வசந்த மண்டபப் பூசை காலை 10.30 மணி
மாலைப் பூசை மாலை 4.30 மணி
வசந்த மண்டபப் பூசை மாலை 5.30 மணி

தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

நந்தாவில், கொக்குவில். - ஆலய பரிபாலன சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்...

கனேடிய முன்னாள் பிரதமர் ஸ் ரீபன் ஹாபருடனான அண்மைய சந்திப் பின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க இதனைத் தெரிவித்தார். ஜூன் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் லண்ட னில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40ஆவது ஆண்டு விழா வின்போது இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்புடன் நாடு தற்போது எதிர்கொள்ளும் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான விரிவான மூலோபாயத் திட்டம் வகுக்கப்பட்டு வரு கின்றது. கடன் மறுசீரமைப்பு ஒரு பிர தான முன்னுரிமையாக இருந்தாலும் முக்கியமான கட்டமைப்புச் சீர்திருத்தங் களை நிறைவு செய்வதிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதி வாய்ப்புகளை வலுப் படுத்தி நீண்டகாலத்துக்குச் சாதகமான வர்த்தக சமநிலையை ஏற்படுத்த எதிர் பார்க்கப்பட்டுள்ளது. தாராளமய பொரு ளாதார நெகிழ்வுக் கொள்கையை துரி தப்படுத்தல் மற்றும் முதலீடுகளை கவர்வதை நோக்காகக் கொண்டு தற் போது செயற்பட்டு வருகின்றோம்.

நான் பிரதமராக இருந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளின் அடிப்படை யில் தமிழ்ப் பிரதேசங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பி னர்களுடன் கலந்துரையாடி தமிழ் மக்க ளின் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து உழைக்க விரும்புகின்றேன். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டமை, புதிய பயங்கரவா தத் தடுப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுதல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை வரையறுப்பது தொடர் பில் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடை யில் நிலவி வந்த சர்ச்சை நீதிமன்றத் தீர்ப்பின்மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே வேளை காணாமற்போனோர் அலுவலக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெ டுக்கப்படுகின்றன - என்றார். (அ-ம-22)

## ஜனாதிபதி...

மேற்கொள்ளவுள்ளார் என்று முல்லைத் தீவு மாவட்ட பதில் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தின ரினதும், முல்லைத்தீவு மாவட்ட செயல கத்தினரினதும் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று ஜூலை மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது. இந்த நடமாடும் சேவைக்கு பிரதம விருந்தினராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ-ம-213)

## பொருளாதாரம்...

பணிப்புடன் செயற்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முயற்சியில், பொருளாதா ரச் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் உறுதிபூண் டுள்ளது. தற்போதைய பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கத்தின் வலுவான முன்னெடுப்பு கள் வரவேற்கத்தக்கன. இலங்கை மக் களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்து வதற்கான பொருளாதார சீர்திருத்தங் களை ஆதரிப்பதற்கு நாங்கள் கடமைப் பட்டுள்ளோம்' என்று அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## 22 தமிழக...

கைதான 22 தமிழக மீனவர்களையும், எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதி வான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தமிழக மீனவர்கள் 44 பேர், நெடுந்தீ வுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கண்கா ணிப்புப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன் போதே அவர்கள் அனைவரையும் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-20)

## என் மீதான...

அவை காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடே என்று கி.கமலராஜன் தெரிவித்துள்ளார். உதயனின் நேற்றைய பதிப்பில் வெளி யான செய்திக்கு அவர் அனுப்பி வைத் துள்ள பதில் அறிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதா வது:-

இலங்கை ஆசிரிய சங்கத்தால் வெளியி டப்பட்டுள்ள அறிக்கையில், எனது பெய ரிடப்பட்டு தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு கள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற் றவையாகும். இலங்கை ஆசிரியர் சங் கமானது தனது அறிக்கையில் நாகரிக மற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள் ளமை அடிப்படை மனித உரிமையை மீறுகின்ற செயற்பாடாகும். இது எதிர்கா லத்தில் இந்தச் சங்கத்துக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அமையும்.

கிளிநொச்சி மாவட்டம் இன்று கல்வியில் மிகவும் முன்னேறிவரும் வேளையில், இந்த மாவட்டத்தில் கல்வி கற்கும் சிறார் களின் நலன்களில் அக்கறை கொள் ளாது, தங்களது தனிப்பட்ட காழ்ப்பு ணர்ச்சிகளை சங்கத்தின் பெயரைப் பயன்படுத்தி அறிக்கை விடுவதானது எதிர்காலக் கல்வியை பாதிப்பதையச் செய்யும் என்பதை தெரிவித்துக் கொள் கின்றேன் - என்றுள்ளது. (அ-ம)

## ஒகஸ்ட்...

வடக்கில் வணிக வாய்ப்புகளை மேம்ப டுத்தும் முகமாக வடக்குக்கான கைத் தொழில்துறைகள் மன்றம், சி.டி.சி. இவன்ட்ஸ் நிறுவனம் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம் ஆகியவற் றுடன் இணைந்து இந்த வர்த்தகக் கண் காட்சி முன்னெடுக்கப்படவுள்ளது. இந் தக் கண்காட்சியில் மொத்தமாக 200 வரையான கண்காட்சிக் கூடங்கள் இடம்பெறவுள்ளன. வடக்கின் தொழில் முயற்சியாளர்களுக்கு 36 கண்காட்சிக் கூடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடகவி யலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற் றது. இதன்போது வடக்கு கைத்தொழில் துறைகள் மன்றத்தின் துணைத் தலை வர் சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் தெரிவித்ததாவது:-

புதிய வர்த்தகத் தொடர்புகள் மற்றும் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளை கட்டி யெழுப்பும் முயற்சியாகவும், வடக்கில் வர்த்தகக் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற தொழில் முயற்சியாளர் களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக் கும் முகமாகவும் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி தென்னிலங்கை மற் றும் இந்தியாவைச் சேர்ந்த தொழில் இயந்திர சாதனங்களை வடிவமைக் கின்ற, உற்பத்தி செய்கின்ற கம்பனிக ளையும், தொழில் வல்லுநர்களையும், வர்த்தகர்களையும் இணைக்கின்ற ஒரு சங்கமமாகவும் காணப்படுகின்றது.

அத்துடன் வடக்கின் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்கள், வர்த் தகர்களுக்குப் புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் தளமாகவும், வடக்கின் வணிக வாய்ப்புகளை மேம்ப டுத்தும் களமாகவும் அமையவுள்ளது.

இந்தக் கண்காட்சி பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆதரவுடன் இடம்பெறுவதால் பங்கேற்பாளர்க ளுக்கு அதிவேக வர்த்தகத் தொடர்புக ளும், வணிக வாய்ப்புகளும் கிடைக்க வுள்ளன. இதன்மூலம் தொழில்துறை உற்பத்திக்கான உட்கட்டமைப்பு முதல் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது வரை வடக்கின் முன் னேற்றம் மேம்படும் வாய்ப்புக் கிட்டும் - என்றார். (அ-ம,66,20)

## ஐக்கிய...

முடிகின்றது. அதை மெய்ப்பிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவும் சஜித்தின் தலைமைத்துவம் மீது கடும் விமர்சனங் களை முன்வைத்துள்ளார்.

பகலில் சஜித் பிரேமதாஸவுடன் ஆலோ சனைகளை நடத்திவிட்டு, இரவில் ரணில் விக்கிரமசிங்கவுடன் உணவருந் தும் நபர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளனர். இவர்கள் கட்சியின் பாம்புகள். அவர்களையே கட்சியின் தலைமைத்து வமும் நம்புகின்றது - என்று ஹிருணிகா வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகள் ஏற் பட்டுள்ளன. எதிர்க்கட்சியில் இருந்து ஒரு குழுவினர் விரைவில் அரசாங்கத்து டன் இணையவுள்ளனர் என்று ஆளும் கட்சியினர் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)


ஓம் விராட் விஷ்வ பிரம்மனே நமஹ

### மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1953



மறைவு 21 . 06 . 2023

**திரு. மயில்வாகனம் பாலச்சந்திரன் (சந்திரன்)**

(சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர்)

யாழ்/திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், மூளாயைப் பூர்வீகமாகவும் கொண்ட, சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை உரிமையாளருமான திரு. மயில்வாகனம் பாலச்சந்திரன் (சந்திரன்) நேற்று முன்தினம் (21.06.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுலோஜனாவின் அன்புக் கணவரும், காமாட்சி மற்றும் காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் மூத்த புதல்வனும், துரைச்சாமி அம்புஜம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வனிதா மற்றும் வதனி, கார்த்திகா (UK), கீர்த்திகா (கனடா), பிரியங்கா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகேசு, பகீரதன், சேந்தன், தவமோகன், தினேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், டிதுஷன், மிதுஷிகன், சஸ்விகா, ஆதீஷ், ஆருத் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10/6, வளாக வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:குடும்பத்தினர்.
077 168 7966

CS(50962)AH-1 பகீரதன் (தக்கு) - 0094 771 687 966


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூடுகளால் அச்சத்தில் இலங்கை!

கொழும்பு, ஜூன் 23
இலங்கையில் கடந்த 24 மணிநேரத்துக்குள் இடம்பெற்ற நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் கடந்த 24 மணிநேரத்துக்குள் (நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரை) நான்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 38 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வன்முறைக்கும்பல்களுக்கிடையே ஏற்படும் மோதல்களே இந்த கொலைகளுக்குக் காரணம் - என்றார். (அ-ம-6)

# மின்கட்டண அதிகரிப்பு ஆராய்வதற்காகக் குழு

## எதிர்க்கட்சியினர் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 23
சட்டவிரோதமாகவும், மக்களால் தாங்க முடியாத வகையிலும் மின்கட்டணத்தை அதிகரித்தமைக்கு எதிராக ஆராய்வதற்காக தனிக்குழுவொன்றை அமைக்குமாறு எதிர்க்கட்சியினர் இணைந்து சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சியினரே இந்தக் கோரிக்கையை எழுத்துவடிவில் சபாநாயகரிடம் முன்வைத்துள்ளனர். தன்னிச்சையாக மின்கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு. இந்த அநீதி குறித்து விசேட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம)

# வலயக்கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் நேற்றுமுதல் ஓய்வுபெற்றுள்ள நிலையில், இதுவரை வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய பொ.ரவிச்சந்திரன் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தியும்திட்டமிடலும்) க.பிரெட்லி ஜெனாட் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம)


## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 19.09.1947



இறப்பு 26.05.2023

கடந்த 26.05.2023 சிவபதம் அடைந்த
எனது கணவர்
அமரர் இராமு நவரட்ணம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.06.2023) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளைமறுதினம் (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து (சுன்னாகம் ஐயனார் கோவில் திருமண மண்டபத்தில்) நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசனநிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

எனது கணவரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி ஊடாகவும், உள்ளூர் மற்றும் வெளியூரில் இருந்தும் ஆறாத்துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறியும் இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இல.283 /46, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

மனைவி - வசந்தி
077 117 8225

## வாகனம் விற்பனைக்கு

LM 4532 டிப்பர் வாகனம்
உடன் விற்பனைக்குண்டு.
விலை 45 லட்சம்.
நேரில் பார்வையிட்டு தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 424 2861
076 163 3176

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த அவிட்டம்
4ம் பாதம் இந்து உயர்குலம்
மணமகனுக்கு (வலது காலில் சிறிது ஊனம்) தகுந்த மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
077 267 3027, 077 915 3121

## சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, பவர் ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், றமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (24.06.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளலாம்.
வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்

ஆர்க் என்ரபிறைசஸ் பிறைவேட் லிமிடட்
A9, வீதி, பரந்தன் சந்தி.
தொடர்புகளுக்கு:- 071 535 7800

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7558 606
076 9119 371

## தேவை

Coca cola நிறுவனத்துக்கு
விற்பனைப் பிரதிநிதி
தேவை. (CS/50951)AH-1
077 667 7781

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
A / L தொழில்நுட்ப பிரிவு
செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்
• உயிர்முறைமை தொழில்நுட்பம்
• பொறியியல் தொழில்நுட்பம்
மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு
இறுதி சந்தர்ப்பம்
ஆரம்பம் 24.06.2023 சனிக்கிழமை காலை - 9.30
தொடர்பு: 077 017 5346

## வண். கிழக்கு கலட்டி எச்சாடி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்

கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
மகா சபைக் கூட்டம்

மகாசபைக் கூட்டமானது நாளைமறுதினம் (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலயத் தலைவர் தலைமையில் தேவஸ்தானம் மணிமண்டபத்தில் நடைபெறும். இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு மகா சபை உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
பரிபாலனசபை.
(CS/50963) (AH-1)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org